# காத்தான்குடியின் சமூக பண்பாட்டுத் தனித்துவமும் மட்டக்களப்பு தமிழ் சமூகத்தினூடான ஓப்பீடும்.

**AR. Jesmil.**
University of Jaffna. Sri Lanka

ஆய்வுச் சுருக்கம் : இவ்வாய்வுக் கட்டுரையானது காத்தான்குடியின் சமூக பண்பாட்டுத் தனித்துவமும் மட்டக்களப்பு தமிழ் சமூகத்தினுடனான ஒப்பீடும் என்ற அடிப்படையில் அமைகின்றது. இவ்வாய்வானது மட்டக்களப்பில் வாழும் முஸ்லிம் குடியிருப்புகளில் காத்தான்குடியை முன்னுதாரணமான குடியிருப்பாகவும் தனித்துவமான இஸ்லாமிய சூழலைக்கொண்ட ஒரு பிரதேசமாவும் அடையாளப்படுத்தி அதனூடாக மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் தனித்துவத்தையும் வரலாற்றையும் எடுத்துக்காட்ட முயல்கின்றது. அத்தோடு இவ்வாய்வுக் கட்டுரையின் கருதுகோளான ''காத்தான்குடி முஸ்லிம்களின் பண்பாட்டுத் தனித்துவம்'' என்ற வினாவிற்கு விடைகாண முற்படுகின்றது.அதற்காக மனிதர்களின் வாழ்க்கை வட்டச் சடங்குகளான பிறப்பு, திருமணம், இறப்பு, என்ற மூன்று பாண்பாட்டுக் கூறுகளை இப்பிராந்தியத்தில் இஸ்லாமியர்களுடன் இரண்டறக் கலந்து வாழும் தமிழ் சமூகத்துடன் ஒப்பிட்டுக்கூறி இங்கு காணப்படும் பண்பாட்டுக் கூறுகளின் ஒற்றுமை, வேற்றுமை, தனித்துவம் யாவை என்பதை விபரிக்க முற்படுகின்றது.

**பிரதான சொற்பதங்கள்** : பண்பாடு,காத்தான்குடி,முஸ்லிம்கள், வரலாறு, தனித்துவம்

## ஆய்வு முறையியல்

இவ்வடிப்படையில் கிழக்கிலங்கை முஸ்லிம் மக்களுககிடையே நிலவும் தனித்துவ மான பண்பாட்டுக் கூறுகளை இவ்வாய்வு வெளிப்படுத்தனைகின்றது இப் பண்பாட்டுக்கூறுகளை மட்டக்களப்பு தமிழர் பண்பாட்டுக்கூறுகளுடன் ஓப்பிட்டு ஆய்வு செய்வது இவ்வாய்வுக்கு வலுசேர்க்கும் என்ற அடிப்படையில் மட்டக்களப்பு முஸ்லிம்களின் பண்பாடு தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தை மையமாகக் கொன்று பெறப்பட்ட நேர்காணல் தரவுகள் அவதானிப்புகள் இவ்வாய்வின் முதல்னிலைத் தரவுகளாக அமைந்தன . இவ்வாறானதரவுகளைப் பெறுவதற்கு 10 மாதிரிகள் ( எழுமாற்று முறையில் அமைந்தமாதிரிகள்) தெரிவு செய்யப்பட்டன . மாதிரிகள் அனைவரும் மட்டக்களப்பைச்சேர்ந்த ,அதிகமாக காத்தான்குடியை சேர்ந்த முஸ்லிம்களாவர் . இரண்டாம் நிலைத்தரவுகளாக , மட்டக்களப்பு பண்பாடு தொடர்பான நூல்கள், கடடுரைகள் என்பன பயன்பட்டன.

## ஆய்வின் நோக்கம்

காத்தான்குடி பிரதேசத்தின் பண்பாட்டையும் வரலாற்றையும் அறிந்து கொள்வதே இவ்வாய்வின் பிரதான நோக்கமாக உள்ளது. இப் பிரதான நோக்கமானது பின்வரும் துணை நோக்கங்களினூடாக அடையப்பட இருக்கின்றது.

1. காத்தான்குடி முஸ்லிம்களின் சமுக பண்பாட்டு அம்சங்களை இனங்கண்டு அவற்றை வேறு படுத்தல்.
2. பண்பாட்டு அம்சங்களினூடாக வரலாற்றை ஆராய்தல்.

**அறிமுகம்**

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் தனித்துவமாக வாழும் தொன்மையான நகரங்களிலொன்றே காத்தான்குடியாகும். வடக்கே நாவற்குடா மஞ்சந்தொடுவாய் ஆகிய கிராமங்களையும்இ தெற்கே ஆரையம்பதி எனும் தமிழ் கிராமத்தையும் கிழக்கு மேற்காக முறையே வங்காள விரிகுடாக் கடலையும் மட்டக்களப்பு வாவியையும் எல்லைகளாகக் கொண்டு இஸ்லாமியஇ கலாசார மரபுகளைப் பின்பற்றி முஸ்லிம்கள் தனித்துவமாக வாழும் ஒரு நகரமாக காத்தான்குடி காணப்படுகிறது.

கிழக்கு மாாணத்தில் மட்டக்களப்பு பிரதேசமானது தனக்கெனதொரு நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தினைக் கொண்ட பிரதேசமாக வரலாற்றில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட, பல்லினச் சமூகத்தினை உள்ளடக்கியுள்ள, இம்மாவட்டத்தில், முஸ்லிம்களுக்கென, இச்சமூகத்தில் தனியானதொரு சிறப்பும் அவர்களுக்கென நீண்டதொரு வரலாற்றுப் பாரம்பரியமும் உண்டென்பதனையும் மறுப்பதற்கில்லை. அவர்கள் இலங்கையில் தனியானதொரு இனக்குழுவினராகக் காணப்பட்டபோதும் தமிழையே பெருமளவிற்குத் தங்களது தாய்மொழியாகக் கெண்டுள்ளனர். மட்டக்களப்புக்கு முஸ்லிம்களது வருகை, அவர்களது ஆரம்ப காலக் குடியேற்றங்கள் தொடர்பாகப் பல்வேறு கருத்து முரண்பாடுகள் காணப்படாலும் கூட இவர்களது ஆரம்பகாலக் குடியேற்றங்கள் கி.பி. 5ஆம் நூற்றாண்டில் பாரிசீக கப்பல் காத்தான்குடிக்கு அண்ய பிரதேசமான பூநெச்சி முனையில் பிரவேசித்தமைக்கான ஆதாரங்கள் அதிகளவில் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் வர்த்தக நோக்குடனேயே, இப்பகுதிக்கு வந்த இவர்கள் காலப்போக்கில் நிரந்தரக் குடிகளக மாறிக்கொண்டு இப்பிராந்தியத்தில் வாழும் ஏனைய சமூகங்களுடன் சுமூகமான உறவைப் பேணி வாழ்ந்து வந்ததுடன் தங்களுக்கே உரிய தனித்துவமிக்க கலாசார மரபுகளை உடைய ஒரு சமூகமாக இப்பிராந்தியத்தில் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டார்கள்.

இலங்கையில் வாழும் முஸ்லிம்களை பொதுவாக ஒரு சமூகத்தார் என்று கணித்தாலும் அவர்களின் பண்பாட்டு அம்சங்களில் பிரதேசரீதியான தனித் தன்மையும் வேறுபாடுகளும் இருப்பதை அவதானிக்கலாம். இஸ்லாம் மதத்திலிருந்தே தங்கள் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் வகுத்திருந்தாலும் இடத்திற்கிடம் இவர்கள் கொள்கைகளும் கோட்பாடுகளும் மாறுபட்டிருப்பதை நாம் காணத்தவறுவதில்லை. குறிப்பாக மட்டக்களப்பிலும் பொதுவாக கிழக்கு மாகாணத்திலும் வாழும் முஸ்லிம்களின் பண்பாட்டு அம்சங்களுக்கும் இலங்கையில் மற்றைய பாகங்களில் வாழும் முஸ்லிம்களின் பண்பாட்டு அம்சங்களுக்கும் அநேக வேறுபாடுகள் இருப்பதைக் காணலாம். இந்த வேறுபாடுகள் இவர்களின் தனித்தன்மையை எடுத்துக்காட்டுவதாகவும் பிரதேசத்துக்குரிய கலாசார சிறப்பியல்புகளைச் எடுத்துச் சொல்லுவதாகவும் அமைகின்றது.

இந்தவகையிலேயே கிழக்கு மாகாணத்தில் அதிகளவிலான முஸ்லிம்களை தனித்துவமாக் கொண்ட ஒரு பிரதேசமாகவும் மட்டக்களப்பு மாவட்டத்தில்

முன்னுதாரணமிக்க முஸ்லிம் பிரதேசமாகவும் காத்தான்குடிப் பிரதேசத்தைக் காண்கின்றோம். சுமார் ஆறுபதாயிரம் மக்கள் தொகையைச் சனத்தெகையாக் கொண்டு குறிப்பிட்ட ஒரு கீலோ மீட்டர் நிலப்பரப்பில் வாழும் இம்மக்களின் கலாசாரப் பண்புகளில் ஏனைய சமூகத்தில் இருந்து வேறுபடுத்திப் பார்க்க முடியுமான அம்சங்களும் ஒற்றுமையான அம்சங்களும் காணப்படுகின்றன. இங்கு வேற்றுமைபடுத்திப் பார்க்க முடியுமான அம்சங்கள் இம்மக்களின் தனித்துவத்தைச் சொல்லுவதாகவும் ஒற்றுமையான அம்சங்கள் இம்மக்கள் இப்பிராந்தியத்தில் வரலாற்று ரிதியாக ஏனைய சமூகங்களோடு சுமூகமாகப் பயணித்த விடயங்களையும் எமக்கு எடுத்துக்காட்டுகின்றன. அவை இப்பிரதேச மக்களின் வரலாற்று ஓட்டத்தை எமக்கு எடுத்துச்சொல்லுவதாகவும் அமைகின்றது.

**காத்தான்குடியின் வரலாறும் பின்னணியும்**

காத்தான்குடியில் முஸ்லீம்கள் நான்கு முனைகளை எல்லைக் கிராமங்களாக வைத்து குடியேறினர்,வாவிக்கரை ஓரமாக மண்முனை,நொச்சிமுனையிலும் கடல் ஓரமாக பூ நொச்சிமுனை,பாலமுனை பகுதிகளில் எல்லைப் பாதுகாப்போடும் தற்காலம் காத்தான்குடி யிருக்கும் இடத்தில் தங்கள் வாழ்வியலையும் வணிகத்தையும் மேற்கொள்ளலாயினர். இவர்களின் முதல் குடியேற்றம் குறித்து இரண்டு விதமான குறிப்புகள் காணப்படுகின்றன.

முதலாவது மட்டக்களப்பு மாண்மியத்தின் செய்தி ஒன்று இப்படிக் கூறுகின்றது

“மாருத சேனன் தனது மகன் எதிர் மன்னசிங்கனுக்கு தோப்பாவை,மட்டக்களப்பு உன்னரசுகிரி,மண்முனை கோரளைப்பற்று பகுதிகளை பட்டம் கட்டிவிட்டான்(1540-1580) இக்காலத்தில் காட்டான் பட்டாணி,சுல்தான்,சிக்கந்தர்,துலுக்கர் முதலிய முஸ்லீம் குடிகள் மண்முனைக்கடுக்காய் (காத்தான்குடி பாங்கர்) பாளையம் போட்டு வர்த்தகம் செய்தனர் என குறிப்பிடுகின்றது.(நடராசா,F.X.C,1962) பொதுவாகவே முஸ்லீம்களை துலுக்கர்,பட்டாணியர் என்று அழைக்கும் வழக்கம் உண்டு.

இவ்வாறு இங்கு நிலைபெற்ற முஸ்லீம்கள் முக்குவக் குலப் பெண்களையே திருமணம் முடித்தனர்,இதில் அதிகளவில் காலிங்க குலப் பெண்களையே முடித்ததாக செவிவழிச் செய்திகள் சொல்லுகின்றன.(காத்தான்குடி வரலாறுஇ 2000இபக்:8)

இரண்டாவது இந்த காட்டான் பட்டாணி எனும் சொல் கஹ்தானிகளை குறிப்பதாக கருதப்படுகிறது.கஹ்தானிகள் அறபு குலத்தினை சேர்ந்தவர்கள் குறிப்பாக யெமன் பகுதியினை சேர்ந்தவர்கள் என கருதப்படுகிறது.( நேர்காணல், 2017.3.10. மஹ்ரூப் கரீம்)

இவ்வாறு வெளியேறிய ஹஹ்தான் என்ற அறபுப் பழங்குடியினர்தான் காத்தான்குடியில் வந்து குடியேறி வாழ்ந்தார்களா என்பதற்குரிய போதுமான ஆதாரம் எமக்கு கிடைக்கப்பெறவில்லை. இந்த ஹஹ்தான் என்பதுதான் பின்னர் காத்தான்குடியாக மருவி வந்தது என இங்குள்ள வாய்மொழி ஆதாரங்கள் கூறுகின்றன. இக்கருத்தினை உறுதிசெய்துகொள்ள இந்த செவிவழி ஆதாரங்களைத் தவிர இக்கருத்தினை உறுதியாகக் கூற போதுமான வரலாற்று ஆதாரங்கள் எமக்கில்லை. இருப்பினும் வரலாற்றை அறிந்து கொள்ள வாய்மொழிக்கதைகளையும்

ஒரு ஆதாரமாகக்கொள்ள முடியும் என்ற அடிப்படையில் இப்பிரதேசத்தின் பூர்வீகம் பற்றிய எமக்குக் கிடைக்கப்பெபறுகின்ற இரண்டுவிதமான வரலாற்றுத் தகவல்களையும் அடிப்படையாகக்கொண்டு ஒரு அநுமானத்தை எட்ட முடியும். அதாவது முக்குவக் குலப்பென்னைத் திருமணம் முடித்த அறபு வம்சாவழி ஹஹ்தான் என்ற யெமன் பிரதேசத்தைச் சேர்ந்த கோத்திரத்தையுடையவராக இருந்திருக்கலாம். இதிலிருந்து ஹஹ்தான்குடி பின்னர் தமிழ் மயப்பட்ட ஒரு சொல்லாக காத்தான்குடியாக மாற்றம்பெற்றிருக்கலாம். இந்த கருத்தை இப்பிரதேச மக்களின் முகத் தோற்றம்இ நிறம்இ உடல்இ அமைப்பு என்பவற்றை ஓப்பிட்டு பார்க்கும்போது ஓரளவு ஏற்றுக்கொள்ள முடியுமாக உள்ளது.(நேர்காணல்இ 2017.3.10. மஹ்ரூப் கரீம் ).

மறுபுறம் முக்குவக்குலப் பெண்ணைத் திருமணம் முடித்ததால் தாய்வழிக்கோட்பாட்டின் வாயிலாக எழுந்த கலாசாரப் பண்பாட்டுக் கூறுகள் இம்மக்களின் வாழ்வியலில் பிரதிபலிப்பதை அவதானிக்கலாம். இங்கு தாய் வழிக்கோட்போடு (திராவிடம்) தந்தைவழிக்கோட்பாடு (அறபு) இரண்டும் ஒன்றரக்கலந்து சங்கமிக்கின்ற ஒரு பிரதேசமாக மட்டக்களப்பு பிரதேசம் குறிப்பாக இக்காத்தான்குடிப் பிரதேசத்தைக் காணலாம்

இங்கு வாமும் தமிழ் இனத்தவருடன் சகோதரத்துவ மனப்பான்மை பூண்டு, நட்புறவுடன் வாழ்ந்து வரும் முஸ்லீம்களின் வாழ்க்கை முறைகளும் பழக்கவழக்கங்களும் சம்பிரதாயங்களும் தமிழ் மக்களுடன் நெருங்கிய தொடர்புடையனவாகக் காணப்படுகின்றன.மட்டக்களப்பில் பெரும்பான்மையோரான இந்துக்களும்இ முஸ்லிம்களும் மத அடிப்படையில் வேறுபட்டிருப்பினும் வாழ்க்கைமுறைகள்,பண்பாட்டு அம்சங்களில் இவர்களுக்கிடையிலே ஒன்றுமைகள் உள்ளன.முஸ்லிம்கள் நான்கு திருமணம் செய்ய அனுமதி இருந்தும் செய்யாதிருப்பதற்குக் காரணம் தமிழ் மக்களுடன் அவர்கள் முன்னைய காலங்களில் ஏதோ வழிகளில் ஒன்றுபட்டிருந்திருக்கிறார்கள் என்று கூறுவதில் தவறில்லை.(அழகு தமிழ் மொழியை இருசாராரும் பேசுவதால், ஒன்றுபட முடியும். தமிழை முஸ்லிம்கள் தாய் மொழியாகக் கொண்டிருப்பது இரு சமூகங்களுக்கிடையே இறுக்கமான வரலாற்றுறவு இருந்திருப்பதைக் காட்டும்.


தமிழ் – முஸ்லிம் மக்கள் மொழியில் மட்டுமல்லாது பண்பாடு, மரபு, ஒழுக்கம், சமூகக் கட்டுப்பாடு பாரம்பரியம், திருமணச் சடங்குகள் போன்ற சிலவற்றில் சில அம்சங்களிலும், சிலவற்றில் முழுவதுமாக ஒற்றுமைப்பட்டுக் காணப்படுகின்றனர். இருப்பினும் காலத்துக்காலம் ஏற்படுகின்ற மாற்றங்கள் தன்மைகள் என்பனவற்றுக்கு ஈடுகொடுத்து வாழப்பழகிக்கொண்ட இம்மக்களின் வாழ்வியலில் இஸ்லாமிய மதம் பெரும் செல்வாக்கு செலுத்துகின்ற காரணியாகவே இருந்துவந்துள்ளது. இஸ்லாமிய மதம் போதனைகளில் இருந்து விடுபட்டு முற்றுமுழுதாக தமிழ்கலசாரப் பண்பாட்டு அம்சங்களை உள்வாங்கிக் கொண்டவர்களாக இம்மக்களை நாம் வரலாற்றில் எங்கும் அடையாளப்படுத்த முடியாது.

தாய் வழிக்கோட்பாட்டை அடிப்படையாகக்கொண்ட கலாசார விழுமியங்கள் இம்மக்களின் வாழ்வியலில் பிரதிபலித்தாலும்கூட தந்தைவழிக்கோட்டபாடான அறபு தூய இஸ்லாமிய வாழ்க்கைமுறையை கொண்ட இஸ்லாமியப் போதனைகளை காலத்துக்காலம் உள்வாங்கிக்கொண்டு இரண்டுவகையான கலசாரப் பின்புலங்களையும் கொண்டு தமக்கான கலாசார மரபுகளையுடைய ஒரு தனித்துவமிக்க வரலாற்றைக் கட்டிக்காத்துக்கொள்ளவும் அத்தகைய வாழ்வியல் ஒன்றை நோக்கி நகர்வதையும் இப்பிரதேசத்தின் கலாசாரப் பண்பாட்டை ஆய்வு செய்யும்போது கண்டுகொள்ளலாம்.

இந்தக் கருத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் காத்தான்குடிப் பிரதேசத்தை மையப்படுத்தி வாழும் மக்களின் வாழ்வியலில் காணப்படும் பிறப்புஇ இறப்புஇ திருமணம் போன்ற பண்பாட்டுக் கூறுகளை அடையாளப்படுத்தி அவற்றில் காணப்படும் ஒற்றுமைஇ வேற்றுமைஇ தனித்துவம் என்ன என்பதை ஆராய்வதோடு இப்பண்பாட்டு கூறுகளின் பின்னணி அதில் ஏற்பட்ட மாற்றங்கள்இ தன்மைகள் எவை என்பதையும் ஒரு ஒப்பீட்டு ரிதியில் இவ்வத்தியாயம் விளக்க முற்படுகின்றது.

## காத்தான்குடிப் பிரதேச மக்களின் பண்பாடு ஓர் ஒப்பீட்டு ஆய்வு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தனித்துவமான ஒரு பிரதேசமாகவும் கிழக்கில் முஸ்லிம்கள் அடர்த்தியாகவும் வாழுகின்ற பிரதேசமாகவும் காத்தான்குடி காணப்படுகின்றது. காத்தான்குடிப் பிரதேச கள ஆய்வானது இவ்வாய்வின் முக்கியமான ஒரு அத்தியாயமாகும். ஏனெனில் கிழக்கு முஸ்லிம்களின் தனித்துவம் என்ற ஆய்வு விடையத்தை கள ஆய்வின் மூலம் பரீட்சித்ததுப்பார்கின்ற ஒரு மைய அத்தியாயமாகவும் இவ் அத்தியாயம் காணப்படுகின்றது. இக்கள ஆய்வில் மட்டக்களப்பு பிரேதேசத்தின் ஒரு முன்னோடிப் பிரதேசமாக காத்தான்குடிப் பிரதேசத்தை எடுத்துக்கொண்டு அங்கு வாழும் மக்களின் வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகளை அவதானிப்பு நேர்காணல் கள விஜயம் என்ற அடிப்படையில் ஒரு நேர்த்தியான ஆய்வு முறையியல் ஒன்றைப் பின்பற்றி மட்டக்களப்பு சமூகத்தின் வாழ்வியல் பண்பாட்டுக் கூறுகள் பரீட்சிக்கப்பட்டது. இக் கள ஆய்வானது ஒரு ஒப்பீட்டுத் தன்மைவாய்ந்ததாகவும் வேற்றுமைகளையும் தனித்தன்மைகளையும் அடையாளப்படுத்துவதாகவும் அமைகின்றது.





மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னுதாரணமிக்க நகரமாக காத்தான்குடிப் பிரதேசத்தினை ஆய்வுப் பிரதேசமாகக் கொண்டு இவ்வாய்வேட்டின் நான்காம் அத்தியாயம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு மனிதனின் வாழ்க்கை வட்டச் சடங்குகளான பிறப்புஇ இறப்புஇ திருமணம் போன்ற மூன்று பண்பாட்டுக் கூறுகள் ஆய்வு விடங்களாக இவ் நான்காம் அத்தியாயம் கொண்டுள்ளன. இங்கு குறிப்பிடப்படும் மூன்று பண்பாட்டுக் கூறுகளும் மனித வாழ்வின் முக்கிய விடயங்களாகும். அவை மனிதப்பண்பாட்டு வளர்ச்சியின் பரிணாமங்களைச் சொல்லும் விடயங்களாகும்.

வரலாற்று ரீதியாக மட்டக்களப்பு மாவட்டம் தமிழ் திராவிடப் பண்பாட்டியல் ஒழுங்குகளுடன் தன்னை இணைத்துக் கொண்ட ஒரு மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் ஒரு மொழி பேசும் இரு இனங்கள் மிக நெருக்கமான உறவுப் பிணைப்புடன் வாழ்ந்து வந்துள்ளார்கள். இவ்விரு சமூகங்களுக்கிடையிலான பண்பாட்டு அம்சங்கள் மிக நெருக்கமானதாகவே காணப்பட்டன. இருப்பினும் இரு இனங்களும் தங்களைத் தனித்துவமான இனக் குழுமமாகவே அடையாளப்படுத்துகின்றனர். காரணம் இரு சமூகங்களும் ஒரு பொதுப்பண்பாட்டின் கீழ் பயணித்தாலும் அவர்களின் பண்பாட்டு முறைமைகளும்இ தன்மைகளும் வித்தியாசமானது. ஏனெனில் எந்தவொரு ஹிந்துவின் திருமண சம்பிரதாயங்களோ பிறப்பு நிகழ்வுகளோ முஸ்லிம்களின் பள்ளிவாயல்களிலோ முஸ்லிம்களின் வீடுகளிலோ நடப்பதில்லை அவ்வாறே ஒருமித்த பண்பாடு என்ற அடிப்படையில் ஒரு முஸ்லிமின் திருமண நிகழ்வோ இறப்பு நிகழ்வோ ஹிந்து கோயில்களிலோ வேறு புனிதஸ்தலங்களிலோ இடம்பெறுவதில்லை. அவை உரிய முறையில் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஏற்ற அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இங்கு ஒரு பண்பாட்டுக் கலப்பு காணப்படுகின்றது. அந்தப் பண்பாட்டுக் கலப்பானது ஒரு சமூகம் இன்னொரு சமூகத்திடம் தனது தனித்துவத்தை இழந்து விட்டது என்பது


அர்த்தமல்ல. மாறாக வரலாற்று ரீதியாக இரு சமூகங்களும் தங்களுக்கிடையிலான பண்பாட்டு அம்சங்களை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டு எவ்வாறு வாழ்ந்து வந்துள்ளனர் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

இக்கருத்துக்கு அமைவாகவே இங்கு மூன்று பண்பாட்டுக் கூறுகள் பரீட்சிக்க எடுத்துக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் ஒற்றுமை வேற்றுமை தனித்தன்மை என்பவற்றை பிரித்து ஆராய்ந்து காத்தான்குடிப் பிரதேச முஸ்லிம்களின் தனித்துவம் என்ன என்பதை அடையாளப்படுத்தி அதனூடாக கிழக்கு முஸ்லிம்களின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது.


**பிறப்புச் சடங்கு தமிழ் முஸ்லிம் சமூகத்தினருக்குப் பொதுவானது**





**முஸ்லிம்களுக்கு மாத்திரம் தனித்துவமானது**





**மாற்றங்களும் மாற்றத்திற்கான காரணிகளும்**





**திருமணச் சடங்கு இரு சமூகங்களுக்கும் பொதுவானது**




**முஸ்லிம்களிடத்தில் காணப்படும் தனித்துவமான திருமணச்சடங்குகள்**




**திருமணச்சடங்குளில் ஏற்பட்ட மாற்றங்களும் காரணிகளும்**




**ஆய்வுப் பகுப்பு.**

மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னுதாரணமிக்க நகரமாக காத்தான்குடிப் பிரதேசத்தினை ஆய்வுப் பிரதேசமாகக் கொண்டு இவ்வாய்வேடு வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு மனிதனின் வாழ்க்கை வட்டச் சடங்குகளான பிறப்பு, இறப்பு, திருமணம் போன்ற மூன்று பண்பாட்டுக் கூறுகள் ஆய்வு விடங்களாக கொண்டுள்ளன. இங்கு குறிப்பிடப்படும் மூன்று பண்பாட்டுக் கூறுகளும் மனித வாழ்வின் முக்கிய விடயங்களாகும். அவை மனிதப்பண்பாட்டு வளர்ச்சியின் பரிணாமங்களைச்

சொல்லும் விடயங்களாகும். அந்த வகையில் இவ்வாய்வானது பின்வரும் விடயங்களைப் பகுப்பாய்வு செய்கின்றது.

1. கிழக்கு முஸ்லிம்களின் சமூகப் பண்பாட்டு வரலாற்றில் தாக்கம் செலுத்தும் பாரசீக அறாபிய தென் இந்திய செல்வாக்கு காத்தான்குடி முஸ்லிம்களின் சமூகப் பண்பாட்டு வரலாற்றிலும் தாக்கம் செலுத்தியுள்ளது.
2. சமூக கலாசாரப் பண்பாட்டு அம்சங்கள் மிகப் பெரும்பாலும் ஓத்த தன்மைவாய்ந்த அம்சங்களாகவே இருக்கின்றது.
3. மாவட்டத்தில் ஏனைய பிரதேசங்களைப் போல் அல்லாது இப் பிரதேசத்தில் முஸ்லிம்கள் தனியாகவும் அடர்த்தியாகவும் வாழுகின்றார்கள்
4. அடர்த்தியான சமூகமாக வாழ்வதால் சமூகப் பண்பாட்டு வரலாற்றில் தனித்தன்மையை உணர்வதாகவும் அந்த தனித்தன்மையான அம்சங்கள் மாவட்டத்தின் ஏனைய பிரதேசங்களுக்கு ஒரு முன் உதாரணமாவும் காணப்படுகின்றது.

**முடிவுரை**

மட்டக்களப்பு மாவட்டத்தின் முன்னுதாரணமிக்க நகரமாக காத்தான்குடிப் பிரதேசத்தினை ஆய்வுப் பிரதேசமாகக் கொண்டு இவ்வாய்வேட்டின் நான்காம் அத்தியாயம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இங்கு மனிதனின் வாழ்க்கை வட்டச் சடங்குகளான பிறப்புஇ இறப்புஇ திருமணம் போன்ற மூன்று பண்பாட்டுக் கூறுகள் ஆய்வு விடங்களாக இவ் நான்காம் அத்தியாயம் கொண்டுள்ளன. இங்கு குறிப்பிடப்படும் மூன்று பண்பாட்டுக் கூறுகளும் மனித வாழ்வின் முக்கிய விடயங்களாகும். அவை மனிதப்பண்பாட்டு வளர்ச்சியின் பரிணாமங்களைச் சொல்லும் விடயங்களாகும்.

வரலாற்று ரீதியாக மட்டக்களப்பு மாவட்டம் தமிழ் திராவிடப் பண்பாட்டியல் ஒழுங்குகளுடன் தன்னை இணைத்துக் கொண்ட ஒரு மாவட்டமாகும். இம்மாவட்டத்தில் ஒரு மொழி பேசும் இரு இனங்கள் மிக நெருக்கமான உறவுப் பிணைப்புடன் வாழ்ந்து வந்துள்ளார்கள். இவ்விரு சமூகங்களுக்கிடையிலான பண்பாட்டு அம்சங்கள் மிக நெருக்கமானதாகவே காணப்பட்டன. இருப்பினும் இரு இனங்களும் தங்களைத் தனித்துவமான இனக் குழுமமாகவே அடையாளப்படுத்துகின்றனர். காரணம் இரு சமூகங்களும் ஒரு பொதுப்பண்பாட்டின் கீழ் பயணித்தாலும் அவர்களின் பண்பாட்டு முறைமைகளும்இ தன்மைகளும் வித்தியாசமானது. ஏனெனில் எந்தவொரு ஹிந்துவின் திருமண சம்பிரதாயங்களோ பிறப்பு நிகழ்வுகளோ முஸ்லிம்களின் பள்ளிவாயல்களிலோ முஸ்லிம்களின் வீடுகளிலோ நடப்பதில்லை அவ்வாறே ஒருமித்த பண்பாடு என்ற அடிப்படையில் ஒரு முஸ்லிமின் திருமண நிகழ்வோ இறப்பு நிகழ்வோ ஹிந்து கோயில்களிலோ வேறு புனிதஸ்தலங்களிலோ இடம்பெறுவதில்லை. அவை உரிய முறையில் ஒவ்வொரு சமூகத்திற்கும் ஏற்ற அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இங்கு ஒரு பண்பாட்டுக் கலப்பு காணப்படுகின்றது. அந்தப் பண்பாட்டுக் கலப்பானது ஒரு

சமூகம் இன்னொரு சமூகத்திடம் தனது தனித்துவத்தை இழந்து விட்டது என்பது அர்த்தமல்ல. மாறாக வரலாற்று ரீதியாக இரு சமூகங்களும் தங்களுக்கிடையிலான பண்பாட்டு அம்சங்களை பரஸ்பரம் பரிமாறிக் கொண்டு எவ்வாறு வாழ்ந்து வந்துள்ளனர் என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.
இக்கருத்துக்கு அமைவாகவே இங்கு மூன்று பண்பாட்டுக் கூறுகள் பரீட்சிக்க எடுத்துக் கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் ஒற்றுமை வேற்றுமை தனித்தன்மை என்பவற்றை பிரித்து ஆராய்ந்து காத்தான்குடிப் பிரதேச முஸ்லிம்களின் தனித்துவம் என்ன என்பதை அடையாளப்படுத்தி அதனூடாக மட்டக்களப்பு முஸ்லிம்களின் தனித்துவத்தை எடுத்துக்காட்டுகின்றது.

**உசாத்துணை**


Kanagaratnam S.O. (1921), Monograph of the Batticaloa District of the Eastern Province, Ceylon, Govermment Printer, Colombo

அஹமத்,வை,1992, வாழைச்சேனை ஒரு வரலாற்றுக் குறிப்பு முஸ்லிம் சமூகசேவைகள் அமைப்பு, வாழைச்சேனை

அனஸ் எம்.எஸ்.எம்.( 2009), புத்தளம் முஸிம்களின வராலாறும் வாழ்வியலும். குமரன் புத்தக இல்லம்,கொழும்பு.

இராசமாணிக்கனார், மா,(1957), தமிழர் திருமணத்தாலி, 2ஆம் பதிப்பு, செல்வி பதிப்கம், காரைக்குடி.

ஈழத்துப்பூராடனார்,(2003), ஈழத்து மட்டக்களப்பு பிரதேச பண்பாட்டுக் கோலங்கள், நிழல் வெளியீடு, ஜீவா பதிப்பகம் இகனடா , சென்னை.

காத்தான்குடி வரலாறு,(2004). காத்தான்குடி: பள்ளிவாயல்கள், முஸ்லிம் நிறுவனங்கள் சம்மேளனம்.

சபாரெத்தினம்.க,(2014), ஆரையம்பதி மண்.

சிவப்பிரகாசர்,ச,(1996)இதிருச்செந்தூர் பூராணம்-வியாசார் சுகருக்கு உதேசித்த அத்தியாயம் 6ஆம் பாடல், சிவப்பிரகாச பண்டிதர் உரைஇவெளியீடு சைவ பரிபாலன சபை,யாழ்ப்பாணம்.

சிவத்தம்பி, கா,(2012), ஈழத்தில் முஸ்லிம்கள்-தமிழர்கள் உறவு, பாவை பிரிண்டர்ஸ் வெளியீடு, சென்னை.

.சிவசண்முகம்.ஞ, மட்டக்களப்பு குகன்குல முக்குவர் வரலாறும் மரபுகளும் ,2000, பக்:43.2000 விபுலம் வெளியீடு

நடராசா F.X.C. வித்துவான், (1962). மட்டக்களப்பு மான்மியம், கலாநிலையம்,மட்டக்களப்பு

நடராசா F.X.C. (1980) மட்டக்களப்பு மக்கள் வளமும் வாழ்கையும், இந்து வாலிபர் முன்னனி வெளியீடு, மட்டக்டக்களப்பு.

தில்லைநாதன்,ச,2015, மட்டக்களப்பு தமிழர் பண்பாட்டு மரபுகள்,குமரன் புத்தக இல்லம்,கொழும்பு.

முகம்மது சமீம்,ஆ.(1979)இலங்கை முஸ்லிம்களின் திருமண சம்பிரதாயங்கள, ரிசானா பப்ளிஸர், மருதானை, கொழும்பு.

மகேஸ்வரலிங்கம்,க.,(2005),மட்டக்களப்பு திருமண மரபுகள்,ஈழநாதம்.

ஏறாவூர் வரலாறு,2005, ஏறாவூர் வரலாற்று ஆய்வு மையம்.

நேர்காணல்:

ஆதம் லெவ்வை ,கே 2017-03-18,ஆசிரியர்,காத்தான்குடி

இத்ரீஸ், ABM, 2017-05-02,எழுத்தாளர் வாழைச்சேனை

சபாரெத்தினம், 2017-04-15,ஓய்வு பெற்ற ஆசிரியர்,ஆரையம்பதி

கோபால்,வெ,2016-12-03, வரலாற்று எழுத்தாளர் மட்டக்களப்பு

ஜௌபர் ஹுஸைன், (2016-12-03)விரிவுரையாளர் கி.பல்கலைக் கழகம்,ஏறாவூர்

தில்லை நாதன்,ச, 2017-01-24,ஓய்வு பெற்ற ஆசிரியர் மட்டக்களப்பு

நளீம் எம், 2017-01-25, கலாசார உத்தியோகத்தர், ஏறாவூர் .

மௌன குரு,சி, 2017-02-04, பேராசிரியர் மட்டக்களப்பு.

மஹ்ரூப் கரீம், 2017-03-10,ஓய்வு பெற்ற அதிபர் காத்தான்குடி

.ஜுனைதா செரீப,; 2017-03-14,இலங்கை நிருவாக சேவை,காத்தான்குடி

ஹனீபா , A.SLM. ,2017-05-28, ஓய்வு பெற்ற விவசாய உத்தியோகத்தர் வாழைச்சேனை

மலர்ச் செல்வன் , 2017-06-04, கலாசார உத்தியோகத்தர்,ஆரையம்பதி